Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396 /2022

Deposition of witness for: PW -6

| | | | |
|---|---|---|---|
| Name | : யுவராஜ் | Father/Husband Name | : பஞ்சாச்சரம் |
| Age | : | Calling | : |
| Date | : 16.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள்ஆஜர்

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது ஒசூரில் பிரிட்ஜ்சர்வீஸ் வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் கொட்டாம்பட்டி ஆகும். கடந்த 29.10.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு நானும், எனது மாமா ஆறுமுகமும் எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள எஸ்சி ஹாஸ்டல் முன்பாக நடந்த வந்துகொண்டிருந்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த போலீசார் எங்களிடம் அங்கு சண்டை நடந்த விவரம் தெரியுமா என்று கேட்டார்கள், நான் 2 நாட்கள் முன்னர் கணேசனுக்கும், ஆறுமுகத்திற்கு சண்டை நடந்த விவரத்தை எனது தாயார் சொல்லி நான் தெரிந்து கொண்டதை போலீசாரிடம் சொன்னேன், போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் உள்ள விவரத்தை என்னிடம் சொல்லி கையொப்பம் வாங்கினார்கள், தற்போது அந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த 2ம் சாட்சி கையொப்பம் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

என்னுடன் எனது மாமா ஆறுமுகம் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் ஆம். இந்த வழக்கு யார் தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் வரைபடத்தில்தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் 7 வருடம் ஆகிவிட்டதால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் தேதி, நேரம், போலீசார் சொல்லிகொடுத்துதான் சொன்னேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு உடன் பிறந்த சகோதரன் சாட்சியாக உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், இவ்வழக்கின் சாட்சிகள் கண்ணன், ராஜ் குமார், கோடிஷ்வரன், தங்கமணி சம்பவ இடத்தில் மது அருந்துவது வழக்கம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, நான் வெளியுரில் வேலை செய்து வருகிறேன், அதனால் அவ்வப்போது கொட்டாம்பட்டியில் உள்ள எனது வீட்டிற்கு வருவேன். எனது சகோதரர்கள் சம்பவ இடத்தில் மது அருந்தி பிரச்சனை செய்ததனால் அவர்கள் மீது ஊர்க்காரர்கள் புகார் கொடுத்து, கண்டித்து அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது, எனக்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் சம்பவம் நடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்னரே போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் ஆம். எத்தனை போலீசார்கள் அங்கு இருந்தார்கள் என்றால் 7 வருடம் ஆகிவிட்டதனால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு

சம்மந்தமாக போலீசார் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் ஆம், நான் கையொப்பம் செய்ததனால் என்னை சாட்சியம் சொல்ல அழைத்தனர்,

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நான் அங்கு இல்லை, எனது அண்ணன் மற்றும் அவரது நண்பர்கள் புகார் கொடுத்திருந்ததனால் அவர்கள் கேட்டுகொண்டதற்காக நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் கையொப்பம் செய்தபோது அந்த இடத்தில் சண்டை நடந்ததற்கான பொருட்கள் ஏதும் இருந்ததா என்றால் இல்லை.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396 /2022

Deposition of witness for: PW -5

Name : ஆறுமுகம் Father/Husband Name : சுப்பையா

Age : Calling :

Date : 16.03.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 16day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள்ஆஜர்

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கொட்டாம்பட்டி, சிவகளத்தில் குடியிருந்து வருகிறேன். லாரி டிரைவாக வேலை செய்து வருகிறேன். கடந்த 29.10.2019ம்தேதி காலை 07.00 மணிக்கு நான் எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். நான் வீட்டிற்கு செல்லும் வழியில் எஸ்சி ஹாஸ்டல் முன்னால் என்னை போலீசார் என்னை நிறுத்தி அந்த இடத்தில் சண்டை நடந்ததாக சொல்லி சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் தயார் செய்ததாக சொல்லி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த முதல்சாட்சி கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். தொடர்ச்சியாக லாரி ஒட்டுவேனா அல்லது அவ்வப்போது லாரி ஒட்டுவேனா என்றால் அவ்வப்போது லாரி ஒட்டுவேன், என்னிடம் தற்போது காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். நான் அங்கு சென்றபோது போலீசார் அங்கு இருந்தார்களா அல்லது அதன்பின்னர் அங்கு வந்தார்களா என்றால் நான் அந்த வழியாக சென்றபோது ஒரு போலீசார் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் என்ன செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான், வரைபடம் போட்டதாக சொல்லி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் வரைபடத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான், என்னிடம் போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை, 4 நாட்கள் முன்னர் போன் செய்து வரைபடத்தில் கையொப்பம் செய்துள்ளதாக சொல்லி சாட்சியம் அளிக்க அழைத்தனர். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர்கள் அழைத்ததனால் சாட்சியம் அளிக்க வந்தேன். நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் போல்தான் நான் எப்போதும் கையொப்பம் செய்வேன் என்றால் இதற்கு முன்னர் தமிழில் கையொப்பம் செய்து கொண்டிருந்தேன், நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். ஒவ்வொரு ஆவணத்திலும் ஆங்கிலத்திலும், தமிழிலும் மாறி, மாறி கையொப்பம் செய்து தவறு என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் போலீசார் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்யவில்லை, எப்போதும் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வேன், தமிழில் கையொப்பம் செய்ய மாட்டேன், போலீசார் கேட்டுக்கொண்டதனால் தமிழில் உள்ள கையெப்பம் என்னுடையது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் தமிழில்தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த சமயத்தில் அந்த இடத்தில் சண்டை நடந்ததற்கான பொருட்கள் இருந்ததை பார்த்தேனா என்றால் இல்லை.